செ.வெ.எண் : 90 நாள் : 27.01.2011

## பத்திரிக்கை குறிப்பு

மாநில குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை அதிகாரிகள், திருமதி.அர்ச்சனா இராமசுந்தரம், இ.கா.ப., காவல்துறை கூடுதல் இயக்குநர், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை அவர்கள் தலைமையில், இந்தத்துறை துவங்கப்பட்டதிலிருந்து இன்றுவரையிலான ஒரு நூறாண்டு கால சரித்திரத்தையும், இத்துறையில் பணிபுரிந்த அதிகாரிகள் புலனாய்வு செய்த பல்வேறுபட்ட முக்கியமான வழக்குகளின் விபரங்களையும் ஒரு "குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை - ஒரு பின்னோக்கம் (1906–2010)" என்ற தலைப்பில் புத்தகம் ஒன்று உருவாக்கி உள்ளனர்.

இச்சுருக்கப்பதிவில் (1).கடந்த மற்றும் நிகழ்காலம், (2).கொலைகள், (3).மோசடி, (4).இனக் கலவரம், (5).தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதம், (6).கணிணிக் குற்றங்கள், (7).கள்ளநோட்டுக் குற்றங்கள், (8).பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், (9).சிலை மற்றும் தொல்பொருள் பற்றிய வழக்குகள், (10).சிறப்பு வழக்குகள் மற்றும் (11).அகில இந்திய காவலர் பணித்திறனாய்வுப் போட்டி ஆகிய 11 தலைப்புகளின்கீழ் விவரங்கள் கோர்வை செய்யப்பட்டுள்ளன. இச்சுருக்கப்பதிவு பயிற்சியலுள்ள அதிகாரிகளுக்கு ஒரு அரிதான பயிற்சிக் கருவூலமாகவும், குற்றப்புலனாய்வுத்துறையில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு அவர்களின் புலனாய்வுத்திறமையை மேம்படுத்தும் விதத்திலும் அமைக்கப்படடுள்ளது. மேலும் இச்சுருக்கப்பதிவு பிற மாநிலங்களுக்கும் அங்கே பணிபுரியும் காவல் துறை அதிகாரிகளின் பயன்பாட்டிற்கு வேண்டி அனுப்பப்பட இருக்கிறது.

இச்சுருக்கப்பதிவு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அளித்த உளங்கனிந்த வாழ்த்துமடலுடன் துவங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இச்சுருக்கப்பதிவினை வெளியிட இசைவு தெரிவித்து இன்று (27.01.2011) காலை 10.30 மணியளவில் தலைமை செயலக வளாகத்தில் இச்சுருக்கப்பதிவின் முதல் நகலினை தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் திருமதி.லத்திகாசரண், இ.கா.ப., அவர்களிடம் வழங்கி தமிழக காவல்துறையையும் குறிப்பாக மாநில குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையினையும் பெருமைப்படுத்தினார்கள். திரு.K.ஞானதேசிகன், இ.ஆ.ப., உள் துறைச் செயலர், திருமதி.அர்ச்சனா இராமசுந்தரம், இ.கா.ப., காவல்துறை கூடுதல் இயக்குநர், திரு.M.N.மஞ்சுநாதா, இ.கா.ப., காவல்துறை தலைவர், திரு.P.கண்ணப்பன், இ.கா.ப., காவல்துறை துணைத்தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள் வெளியீட்டு விழாவில் பங்கேற்றனர்.

11

குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை - ஒரு மீள்நோக்கம் (1906-2010)

இப்புத்தகத்தில் உள்ள சில முக்கியமான வழக்குகளின் விவரங்கள்

"CB CID – A Retrospect (1906-2010)"

This compendium of CB CID covers about 221 cases dealt with by the CB CID since its inception in the year 1906. The oldest case reported here is the sensational 'Maniyachi Murder Case' of 1911. Among 38 case of murder 'Visa Visha Oosi series of murders of 1972, Sansi gang dacoities and murders of 1983, Auto Shankar and his serial murders of 1987, Premananda murder cases, M.K. Balan and Jayakumar murders, Panaiyur Double Murder case are a few important cases. Death of Nandagopal and Rape of Padmini is also reported here.

Among Frauds, Gold Quest fraud, Bogus Priest Anandaraj and Job Saravanan and the notorious cheat Maya Venkatesan case are worth mentioning. Coimbatore serial bomb blasts has been reported under the head communal violence. Murder of policemen in Thirupathur, Pondy bazzar shootout, Meenambakkam Airport blast have been covered under Extremism and Terrorism.

Coimbatore counterfeiter Krishnan cases and cases of interstate ramification have been brought under counterfeit currency cases. Ritamary rape case and Irrula girl rape by Pondy Cops are covered under the heading 'Crime against Women and Children'. Sivapuram Nataraja Murder case and Battle for 'Nataraja of Pathur idol in the Royal High Court of Justice, London in 1976 have been discussed under the heading 'Offence against Idols and Antiques'.

MGR shoot out, Fire at LIC and Spencer complex, Illegal mining in the blue mountains (The Nilgris) and Mystery of missing Jeeyar of Srirangam are covered under the head Special Cases. The laurels achieved by the Tamil Nadu Police in All India Police Duty Meets continuously since 1953 have also been highlighted.



வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9